<u>சுருக்கம்</u>

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – 2013–2014 ஆம் கல்வியாண்டில் மேல்நிலை வகுப்புகளில் (11 ஆம் வகுப்பு) பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு – ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந 7) நலத் துறை</u>

அரசாணை (ப) எண்.160 நாள்: 24.07.2013

விஜய ஆடித்திங்கள் 8,
திருவள்ளுவர் ஆண்டு 2044

படிக்கப்பட்டது:

1. அரசாணை (ப) எண்.312, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 1.8.2012.
2. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கடிதம் ந.க. எண். க1/8305/2013, நாள் 2.4.2013 மற்றும் 1.7.2013.
3. அரசாணை (நிலை) எண் 36, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 7.6.2013.

-----

<u>ஆணை:</u>

அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பகுதியாகப் பெறும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் (11 ஆம் வகுப்பு) பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2012–2013 ஆம் ஆண்டில் மேல்நிலை வகுப்புகளில் (11 ஆம் வகுப்பு) பயின்ற ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு முதற் கட்டமாக மிதிவண்டிகள் வழங்க 51,45,41,000/– ரூபாய் (ரூபாய் ஐம்பத்து ஒரு கோடியே நாற்பத்து ஐந்து இலட்சத்து நாற்பத்து ஓராயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து 2012–2013 ஆம் ஆண்டில் மாணவ / மாணவியர்களுக்கு கூடுதல் மிதிவண்டி வழங்கும் பொருட்டு மாணவியர் மிதிவண்டிக்காக 81,14,064/– ரூபாய், மாணவர் மிதிவண்டிக்காக 63,80,938/– ரூபாய், ஆக மொத்தம் 1,44,95,000/– ரூபாயை, 2013–2014 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து பயன்படுத்திக் கொள்ள மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதி திராவிடர் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3. ஆதி திராவிடர் நல இயக்குநர் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2013–2014 ஆம் கல்வியாண்டில் அரசுப் பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பகுதியாகப் பெறும் பள்ளிகளில் மேல்நிலை வகுப்புகளில் (11 ஆம் வகுப்பு) பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு அரசாணை வெளியிடும்படியும், இத்திட்டத்தினை 2013–2014–ஆம் ஆண்டில் செயல்படுத்துவதற்கு நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடும்படியும் அரசைக் கோரியுள்ளார். மேலும், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட 1.7.2013 நாளிட்ட கடிதத்தில், 2012–2013 ஆம் கல்வியாண்டில் தூத்துக்குடி மாவட்டத்திற்கு கூடுதலாக 437 மிதிவண்டிகள் தேவை எனக் கணக்கிடப்பட்டதன் அடிப்படையில் அதற்கான தொகையையும் கோரியதாகவும், பின்னர் கூடுதல் மிதிவண்டிகள் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டதால், 437 மிதிவண்டிகளுக்கான தொகையான ரூ.14,14,271/–, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ.1,44,95,000/–ல் இருந்து பெற்று வழங்கப்படவில்லை என்றும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. ஆதி திராவிடர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் ஆய்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், அரசுப் பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / அரசு உதவி பகுதியாகப் பெறும் பள்ளிகளில் 2013–2014 ஆம் கல்வி ஆண்டில் மேல்நிலை வகுப்புகளில் (11 ஆம் வகுப்பு) பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் மாணவ / மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தவும், கொள்முதல் குழுவால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையின் அடிப்படையில் இத்திட்டத்தின் கீழ் மிதிவண்டி நிறுவனங்களிடமிருந்து மிதிவண்டிகளை ஆதி திராவிடர் நல இயக்குநர் வாங்கி வழங்கவும், இச்செலவினத்திற்காக, அரசாணை (நிலை) எண் 36, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 07.06.2013–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையில் எஞ்சியுள்ள தொகை ரூ.14,14,000/– (ரூபாய் பதினான்கு இலட்சத்து பதினான்காயிரம் மட்டும்) சேர்த்து மொத்தம் ரூ.55,03,65,000/–ஐ (ரூபாய் ஐம்பத்தைந்து கோடியே மூன்று இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் 2013–14–ஆம் ஆண்டு வரவு–செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்புகளின் கீழ் பிரித்து பற்று வைக்கப்பட வேண்டும்:–

**மாணவியர்கள் – ரூ. 29,59,87,000/–**

“2225 – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் – KJ – அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் பதினொன்றாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிட மாணவியர் அனைவருக்கும் இலவசமாக மிதிவண்டி வழங்குதல் – 09 – உதவித்தொகை – 03 – குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை”

(த.தொ.கு 2225 – 01 – 277 – KJ – 0930)

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 9.
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அரசுச் செயலர்
அவர்களின் தனிச் செயலாளர், சென்னை – 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

தி வெங்கடேசன் (signature)
பிரிவு அலுவலர் 24/7/13

மாணவர்கள் – ரூ.25,43,78,000/-

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 01 – ஆதிதிராவிடர் நலன் – 277 – கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப்பணிகள் – II மாநிலத்திட்டம் – KO – அரசு / அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதிதிராவிடர்/ பழங்குடியினர்/கிருத்துவ மதத்திற்கு மாறிய ஆதிதிராவிட வகுப்புகளைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் இலவசமாக மிதிவண்டிகள் வழங்குதல் – 09 – உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை"
(து.தொ.கு 2225 – 01 – 277 – KO – 0930)

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் 2013–2014 ஆம் ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை முடிந்தவுடன் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட வேண்டிய மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கையை சரியாகக் கணக்கிட்டு கூடுதல் மிதிவண்டிகள் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுமானால், அதற்காக தேவைப்படும் நிதியை 2013–2014 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ஒப்பளிப்பு செய்யக் கோரி அரசுக்கு தனியே கருத்துரு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை, நிதித் துறையின் அ.சா.எண். 11/DS(DS)/ADTW/13, நாள் 22.07.2013–ல் அதன் இசைவினைப் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர், ஆதி திராவிடர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பழங்குடியினர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 6.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– 18 / 35 (பெயரில்).

நகல்:
பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை, சென்னை – 9.
நிதித் (ஆதி (ம) பந) துறை, சென்னை – 9.